டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் ஜுவல்லர்ஸ்
agridoctor.in | 4.11.2025 வியாழக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 137 - Madurai | Online Edition

# தேசிய விவசாயிகள் நல திட்டத்திற்காக 2024-25ல் தமிழ்நாட்டிற்கு ரூ.565 கோடி விடுவிக்கப்பட்டது

## மத்திய அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான் தகவல்

புது தில்லி, டிச.3

பிரதமரின் தேசிய விவசாயிகள் நல திட்டத்திற்காக 2024-25 நிதியாண்டில் நாடு முழுவதும் ரூ.7,746.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.5,379.38 கோடி விடுவிக்கப்பட்டிருப்பதாகவும், இதில் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.593.79 கோடி ஒதுக்கப்பட்டு ரூ.565.14 கோடி விடுவிக்கப்பட்டிருப்பதாகவும் மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற மக்களவையில் உறுப்பினர்கள் ஜி.செல்வம், எஸ்.ஜெகத்ரட்சகன், கே.நவாஸ்கனி, சி.என்.அண்ணாதுரை ஆகியோர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சர், இந்தத் திட்டத்தின் கீழ், காஞ்சிபுரம், ராமநாதபுரம், திருவண்ணா மலை ஆகிய மாவட்டங்களில் நெல் சாகுபடி பரப்பு விரிவாக்கம், கரும்பு சாகுபடி மேம்பாட்டுத் திட்டம், சக்கரை ஆலை திறன் மேம்பாட்டுத் திட்டம், தோட்டக்கலை, வேளாண் பொறியியல் ஆகியவற்றுக்கு நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் செயல்பாடுகள் குறித்த விவரங்களையும் பட்டியலிட்டார்.

பிரதமரின் தேசிய விவசாயிகள் நலத் திட்டத்தின் கீழ், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2024-25 நிதியாண்டில் 7,100 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு 7,100 மண்வள அட்டைகள் விநியோகிக்கப்பட்டதாகவும், 2025-26 நிதியாண்டில் 7,100 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு 5,536 மண்வள அட்டைகள் விநியோகிக்கப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார்.

இதே காலகட்டத்தில் ராமநாதபுரத்தில் முறையே 13,650 மற்றும் 12,700 மண்வள அட்டைகள் வழங்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். திருவண்ணாமலை மாவட்டத்தில் 2024-25 நிதியாண்டில் 26,852 மண்வள அட்டைகள் வழங்கப்பட்ட நிலையில் 2025-26 நிதியாண்டில் 25,315 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு 16,723 மண்வள அட்டைகள் வழங்கப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

வேளாண் காடுகளுக்கான மரக்கன்று உற்பத்தி திட்டத்தின் கீழ், 2025-26 நிதியாண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 10 நர்சரிகளும், ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு நர்சரியும், திருவண்ணாமலை மாவட்டத்தில 3 நர்சரிகளும் அமைக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றிலும் தரமான சுமார் 25,000 மரக்கன்றுகள் வளர்க்கப் பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

மேலும், விவசாயிகள் கௌரவிப்பு நிதியின் கீழ் தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு 21 தவணைகளில் மொத்தம் ரூ.12,764.08 கோடி வழங்கப்பட்டதாகவும், தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங் களுக்கும் ஒவ்வொரு தவணையிலும் வழங்கப்பட்ட தொகையின் விரிவான விவரங்களைப் பட்டியலிட்டார்.

விவசாயிகள் கௌரவிப்பு நிதி – பிஎம் கிசான் திட்டம் 2019 பிப்ரவரி மாதத்தில் தொடங்கப்பட்டதிலிருந்து நான்கு மாதங்களுக்கு ஒரு முறை விவசாயிகளின் நிதி தேவைக்காக ரூ.2,000 வீதம் ஆண்டுக்கு 3 தவணைகளில் ரூ.6,000 வழங்கப் படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். இந்த ஆண்டு ஆகஸ்ட் முதல் நவம்பர் வரையிலான நான்கு மாத காலத்திற்கு 19.11.25 அன்று 21-வது தவணைத்தொகை வழங்கப்பட்டதாகவும், இதில் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த 1,38,955 விவசாயிகளும், காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 21,321 விவசாயிகளும் பிஎம் கிசான் திட்டத்தில் பயன் அடைந்ததாக கூறினார்.

இத்திட்டத்தில் பிஎம் கிசான் போர்ட்டல், பிஎம் கிசான் செயலி, பொதுச்சேவை மையங்கள் ஆகியவற்றின் மூலம் விவசாயிகள் தாங்களாகவே பதிவு செய்து கொள்ளலாம் என்றும், உரிய சரிபார்ப்புக்குப்பின் சம்பந்தப்பட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் நிதி பெற அனுமதி அளிப்பதாகவும் சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்தார். நாடு முழுவதும் இந்த திட்டத்தின் கீழ், 21 தவணைகளில் ரூ.4.09 லட்சம் கோடி விவசாயிகளுக்கு நேரடி பயன் பரிமாற்ற முறையில் வங்கி கணக்குகளில் செலுத்தப்பட்டிருப் பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# இயற்கை விவசாயிகள் மற்றும் இயற்கை விவசாய தொழில் முனைவோர்கள் சந்திப்பு

வேலூர், டிச.3

இயற்கை விவசாயிகள் மற்றும் இயற்கை விவசாய தொழில் முனைவோர்கள் சந்திப்பு வரும் சனிக்கிழமை (6.12.25) காலை 10 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரையில், வேலூர் மாவட்டம், காளாம்பட்டு, லத்தேரி அருகில், அறிவுத்தோட்டம் இயற்கை வேளாண் பண்ணையில் வைத்து நடைபெறும்,

இந்நிகழ்வில், அறிவு தோட்டம் சந்திப்புகளும் சாதிப்புகளும், விவசாய மேலாண்மையில் மழைக் கால சவால்களும் சமாளிக்கும் வழிமுறைகளும், மற்றும் தொழில் முனைவோருக்கான செய்முறை பயிற்சிகள் என்ற தலைப்புகளில் கலந்துரையாடல் நடைபெறும்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக முன்னோடி விவசாயிகள், தொழில் முனையம் பயிற்சியாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

**பதிவு :** அவசியம். கட்டணம் ஏதுமில்லை.

இச்சந்திப்பில் பங்கேற்போருக்கு மதிய உணவு அறிவுத் தோட்டத்தில் ஏற்பாடு செய்யப்படுகிறது.

**மக்கள் நலச் சந்தை :** கண்காட்சி மற்றும் விற்பனை இடம் பெறும்.

இச்சந்திப்பு நிகழ்விற்கு கு.செந்தமிழ் செல்வன், அறிவுத் தோட்டம், 94430 32436 அழைப்பு விடுத்துள்ளார்.

**குறிப்பு :** மதிய உணவுக்குப் பிறகு வேளாண் தொழில் முனைவோர் பெண்கள் கூட்டமைப்பின் WAN ஆலோசனைக் கூட்டம் நடைபெறும்.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483






**பீர்க்கங்காய்**

பீர்க்கங்காய் சுமார் 150 முதல் 200 கிலோ விற்பனைக்கு தினமும் கிடைக்கும்.

விலை கிலோ ரூ.40/-.

**தொடர்புக்கு : வரதன், 98432 07310.**

**கடலை கொடி**

ஆடுகளுக்கு தேவையான கடலை கொடி 70 ரோல் விற்பனைக்கு உள்ளது. ஒரு ரோல் எடை சராசரியாக 25 கிலோவுக்கு மேல் இருக்கும்.

**இடம் : அவினாசி.**

விலை மற்றும் மற்ற தகவல்களுக்கு 80568 63229 என்ற எண்ணை தொடர்பு கொண்டு நேரில் வந்து பார்த்து வாங்கிக் கொள்ளலாம்.



**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

**நன்றி**

# நெல்லில் மேம்படுத்தப்பட்ட சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகள் பற்றிய வெளிவளாக பயிற்சி




கடலூர், டிச.3

கடலூர் மாவட்டம், முஷ்ணம் வட்டாரம், சாத்தமங்களம் கிராமத்தில், விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பாக, நெல்லில் மேம்படுத்தப்பட்ட சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகள் பற்றிய வெளிவளாக பயிற்சி 2.12.25 அன்று நடைப்பெற்றது.

திட்ட ஒருங்கிணைப்பாளர், முனைவர் க.நடராஜன், இப்பயிற்சியை துவக்கி வைத்து, நெல்லில் சாகுபடி தொழில்நுட்பங்கள், குறுவை, சம்பா, பின் சம்பா, தாளடி, நவரை போன்ற பருவங்களுக்கேற்ற நெல் இரகங்கள், விதை நேர்த்தி மற்றும் உயிர் உரங்கள் பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார். மேலும், ADT 58/ ADT 59 விதை வயலினை ஆய்வு செய்தார்.

கு.காயத்ரி, (உதவி பேராசிரியர்), மண்வள மேம்பாடு பற்றியும், பயோ பொட்டாஷ் தெளித்தல், நொதித்த அங்கக எரு நெல் வயலுக்கு இடுதல் குறித்தும் மற்றும் அசோலா உற்பத்தி பற்றியும் தெளிவாக விவரித்தார். க.கலைச்செல்வி (உதவி பேராசிரியர்), நெற்பயிரில் கோனோவிடர் பயன்பாடு பற்றியும், களைகொல்லிகள் வகைகள், தெளிக்கும் அளவு, தருணம் பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார். முனியன் (தனுகா நிறுவனம்), நெற் பயிருக்குக்கேற்ற அனைத்து வகையான பூச்சி கொல்லிகள் மற்றும் பூஞ்சாணக் கொல்லிகள் பற்றி விளக்கினார். மேலும், கடலூர் மாவட்டம், சாத்தமங்களம் கிராமம், முஷ்ணம் வட்டாரத்தை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# உணவு மற்றும் இயற்கை தயாரிப்புகள் கண்காட்சி – 2025

கோயம்புத்தூர், டிச.3

கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் மற்றும் E-Yuva மையம், தாவர உயிரி தொழில்நுட்பத் துறை இணைந்து, உணவு மற்றும் இயற்கை தயாரிப்புகள் கண்காட்சி – 2025 எனும் நிகழ்வை 20 மற்றும் 21 டிசம்பர் 2025 அன்று நடத்த உள்ளது.

இக்கண்காட்சி உணவு மற்றும் இயற்கை தயாரிப்புகள் துறையில் நடைபெறும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள், தயாரிப்புகள், சேவைகள் மற்றும் வாய்ப்புகளை ஒருங்கிணைந்த ஒரு தளத்தில் வெளிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தொழில் முனைவோர், புதுமையாளர்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், வேளாண் தொழில் தொடக்க நிறுவனங்கள், இயற்கை தயாரிப்பு மற்றும் பல்வேறு தொழில் பங்குதாரர்கள் இதில் பங்கேற்பர். நிறுவனங்கள், ஸ்டார்ட் அப்கள் மற்றும் தொழில்முனைவோர் தங்கள் புதுமையான தயாரிப்புகள் மற்றும் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தியும், நெட்வொர்க்கிங் மற்றும் அறிவு பகிர்வு அமர்வு களில் கலந்து கொண்டும் பயன் பெற அழைக்கப்படுகிறார்கள்.

சிறந்த இயற்கை உணவு சார்ந்த தயாரிப்புகளுக்கு பரிசு தொகை வழங்கப்பட உள்ளது.

### பரிசுகள்

**பிரிவு – I : Food Innovation**

- முதல் பரிசு – ரூ.10,000/–
- இரண்டாம் பரிசு – ரூ.5,000/–
- மூன்றாம் பரிசு – ரூ.2,000/–

**பிரிவு – II : Idea Pitching**

- முதல் பரிசு – ரூ.5,000/–
- இரண்டாம் பரிசு – ரூ.2,000/–
- மூன்றாம் பரிசு – ரூ.1,000/–

பொதுமக்கள் பதிவு முற்றிலும் இலவசம் என்பதால், அனைவரும் கலந்து கொள்ளலாம். குறைந்த எண்ணிக்கையிலான காட்சிக்கு ஸ்டால்கள் மட்டுமே உள்ளன.

மேலும் விபரங்களுக்கு, உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம், TNAU 80565 06214, 88702 81435 தொடர்பு கொள்ளலாம்.

# அடர் நடவு பருத்தி குறித்த சிறப்பு பயிற்சி



கோயம்புத்தூர், டிச.3

கோவை, வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையம் இணைந்து நடத்தும் அடர் நடவு பருத்திக் கான சிறப்பு பயிற்சி சர்க்கார் சாமக்குளம் வட்டாரத்தில் உள்ள கீரனத்தம் கிராமத்தில் நடைபெற்றது. இந்த பயிற்சியில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தொழில்நுட்ப வல்லுநர் சுரேஷ் குமார், அனைவரையும் வரவேற்று நிகழ்ச்சியை தொடங் கினார் மற்றும் சர்க்கார சாமகுளம் வட்டாரத்தைச் சேர்ந்த உதவி வேளாண் இயக்குனர் நாமதுல்லா, வேளாண் துறையில் உள்ள திட்டங்கள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். மேலும் துணை வேளாண் அலுவலர் வேலுச்சாமி, உயிர் உரங்கள் ஆகிய ட்ரைகோடர்மா மற்றும் சூடோமோனாஸ் பற்றி விளக் கினார். வேளாண்மை அறிவியல் நிலையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் பொறுப்பு கோமதி, அடர் நடவு பருத்தி மற்றும் நீண்ட இலை பருத்தியை கடந்த இரண்டு ஆண்டு களாக 150 ஏக்கர் பரப்பளவில் பருத்திக்கான சிறப்புத் திட்டத்தில் விரிவுபடுத்தியுள்ளோம் என்று கூறினார்.

மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மை விஞ்ஞானி சங்கரநாராயணன், அடர் நடவு பருத்தி சாகுபடியில் அதிக லாபம் ஈட்ட முடியும் என்றும் அதில் மேபிக்வாட் குளோரைடு என்னும் வளர்ச்சி ஊக்கியை தெளிப்பதன் மூலம் அதிக காய் பிடிக்கும் தன்மை உள்ளது என்று கூறினார்.

மேலும் கோவை மாவட்டத்தைச் சார்ந்த நடமாடும் மண் பரிசோதனை நிலையம் மூலம் விவசாயிகள் தங்கள் மண் மற்றும் நீர் மாதிரிகளை கொண்டு வந்து பரிசோதனை செய்து கொண்டு பயனடைந்தனர்.

இந்த பயிற்சியில் 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இந்த பயிற்சியின் ஒரு பாகமாக அருள் பிரகாசம் என்கின்ற விவசாயின் தோட்டத்திற்கு நேரடியாக

சென்று பருத்தி செடிகளை ஆய்வு செய்து நோய் மற்றும் பூச்சி தாக்கத்திற்கு அதற்கான மருந்தும் மற்றும் காய் வளர்ச்சிக்காக டி ஏ பி கரைசலை தெளிக்கும்படி பரிந்துரைத்தோம். இப்பயிற்சிக் கான நன்றி உரையை சிந்துஜா கூறினார். மேலும் இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் துரைசாமி செய்திருந்தார்.


# மண்புழு உர தயாரிப்பு முறை பற்றி விவசாயிகளுக்கு பயிற்சி



திண்டுக்கல், டிச.3

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் வட்டாரம் அட்மா திட்டத்தின் கீழ் மாங்கரை கிராமத்தில் மண்புழு உர தயாரிப்பு முறை பற்றி விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சி ரெட்டியார்சத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பழனிச்சாமி அறிவுரையின்படி முத்துராம் முதுநிலை ஆராய்சியாளர், மண்புழு உரம் தயாரிப்பு முறை அதன் சாகுபடி முறை மற்றும் தினமும் தண்ணீர் தெளித்து பாதுகாத்து உரம் தயாரிக்கலாம். வேகமாக உற்பத்தி செய்ய கருப்பட்டி அல்லது சர்க்கரை தண்ணீரை தெளிப்பதால் அதிகமாக சாகுபடி செய்யலாம் என்றார். உதவி வேளாண்மை அலுவலர் மூர்த்தி, விவசாயிகளுக்கு குளிர்பதன கிடங்கில் வைத்து விலை அதிகரித்தவுடன் பயன்படுத்தலாம் என கூறினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப மேலாளர் சுகன்யா உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு மற்றும் அருண்குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.



# விதைக்காமல் விளையும் 'அதலைக்காய்'- ஒரு பார்வை

காய்கறிகளில் இது ஒரு பினிக்ஸ், கோடையில் மடிந்து போனாலும், காலத்தில் மழை பெய்தவுடன் துளிர்த்து வளரும் காய் தான் அதலைக்காய்.

இது மானாவாரியாக கரிசல் காட்டில், அதுவும் விருதுநகர் மாவட்டத்தின் கிழக்கு பகுதிகளான விருதுநகர், பாலவநத்தம்,




மல்லாங்கிணர், சாத்தூர், அருப்புக்கோட்டை பகுதிகளில் தானாகவே விதைக்காமல் விளையக்கூடிய கொடி வகை காய்கறி தான் அதலைக்காய்.




**கசக்கும் அதலைக்காய் சாகுபடி இனிக்கும்?**

இதனுடைய அறிவியல் பெயர் (MOMORDICA TUBER ROSA). கொடியாக படர்ந்துள்ள அதலைக்காய் கிழங்கிலிருந்து தான் வளரும். இவை மண்ணுக்குள் அடியில் இருக்கும். பாகற்காயுடன் மரபு வழி தொடர்பு கொண்டவை. வறட்சியான காலங்களில் காய்ந்து போனாலும் பருவமழை காலங்களில் (ஆவணி,புரட்டாசி) மாதங்களில் துளிர்விட்டு கொடி வீசும். வரப்பு ஓரங்களில், கரிசல் காட்டில் நடுப்பகுதியில் நன்றாக வளரும். எவ்வளவு மழை பெய்யதாலும் அழுகி போகாத கொடி அதலைக்கொடி. அதனுடைய இலைப்பகுதி இதய வடிவமாக இருக்கும். ஒரே கொடியில் ஆண் மலர்கள் தனியாகவும், பெண் மலர்கள் தனியாகவும் மெல்லிய மஞ்சள் நிறத்தில் இருக்கும். காய்கள் கரும் பச்சை நிறத்தில் புறத்தோலில் எட்டு நுண்ணிய துளை இருக்கும். விதைகள் நீளவாக்கில் 4.6 மி.மீ அளவில் முட்டை வடிவில் வழவழப்பாகவும் பளிச்சென இருக்கும். ஐப்பசியில் காய்க்க தொடங்கி தை மாதம் வரை நீடிக்கும்.

**அறுவடை**

இது தானாக களைச்செடிகள் போல இருப்பதால் காட்டு வேலை செய்யும் மகளிர்கள், ஆடு, மாடு மேய்ப்பவர்கள் காடுகளில் இதனை பறித்து தங்களுடைய தேவைக்கு போக மீதமுள்ளவற்றை உள்ளூர் கடைகளில் விற்பனை செய் வார்கள். தற்போது இந்த காய் ஒரு கிலோ 160 முதல் 180 வரை விற்பனை செய்யப்படுகிறது.

## அதலைக்காயின் மருத்துவ குணம் என்னென்ன?

பாகற்காய் போன்றே கசப்பான சுவைக் கொண்டதால், குறிப்பாக சர்க்கரை நோயாளிகள், நீரழிவு நோயாளிகளுக்கு சர்க்கரை கட்டுக்குள் வைத்திருக்க இந்த காய் உதவும். மஞ்சள் காமாலைக்கேற்றது.

## அதலைக்காயில் உள்ள சத்துகள்?

அதலைக்காயில் அதிக நீர்சத்து, நார்சத்து, மாவுசத்து, புரத சத்து போன்றவைகளும், கால்சியம், பொட்டாசியம், சோடியம், இரும்பு போன்ற நுண்ணூட்ட சத்துகளும் உள்ளன. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையிலும் இதனை உண்ணலாம். இதிலுள்ள கசப்பு சுவை வயிற்றில் உள்ள புழு பூச்சிகளை கட்டுப்படுத்தும்.

விருதுநகர் கிழக்கு பகுதியில் தானாக விளையும் இந்த காய்களுக்கு தனி மவுசு உண்டு. வெளிமாவட்ட வியாபாரிகள் இங்கே வந்து இதனை வாங்கி செல்கின்றனர். கிராமப் புறங்களிலிருந்து நகரங்களுக்கு சென்றவர்கள் இதனை தேடி வாங்கி காய்கறியாக பயன்படுத்துகின்றனர்.

அறுவடை செய்த ஓரிரு நாளில் பயன்படுத்த வேண்டும், இருப்பு வைக்க முடியாது. தானாகவே வெடித்து விடும்.

தற்போது சிலர் ஓரிரு கிழங்குகளை விலைக்கு வாங்கி தங்களுடைய வீட்டு தோட்டங்களில் நட்டு பராமரித்து வருகின்றனர்.

இதற்கு புவிசார் குறியீடு வாங்கிட அந்த பகுதி விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# இப்கோ நானோ டி.ஏ.பி. – ஒரு பார்வை

சென்னை, டிச.3

நானோ டி.ஏ.பி. திரவ உரத்தில் 8%, தழைச்சத்தும் 16%, மணிச்சத்தும் உள்ளது. நானோ டி.ஏ.பி.யைப் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்கையில் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரியத்தன்மை அதிகரிக்கிறது. மேலும், பயிரின் வளர்ச்சி, தரம் மற்றும் மகசூலையும் அதிகரிக்கிறது.

**பயன்படுத்தும் முறை**

ஒரு மூடி நானோ டி.ஏ.பி.பாட்டிலின் அளவு = 25 மி.லி.

**விதை நேர்த்தி**

ஒரு கிலோ விதைக்கு, 3–5 மி.லி. நானோ டி.ஏ.பி.யைத் தேவையான அளவு நீரில் கலந்து விதையின் மேற்பரப்பில் ஒரு மெல்லிய படலம் போல் உருவாகச் செய்து, 25 முதல் 30 நிமிடம் வரை வைத்து, பின்பு நிழலில் உலர்த்தி விதைப்பு செய்ய வேண்டும்.

**வேர்/கிழங்கு/கரணை நேர்த்தி**

தேவையான அளவு நீரில் நானோ டி.ஏ.பி. திரவத்தை, ஒரு லிட்டர் நீருக்கு, 3–5 மி.லி. என்றளவில் கலந்து நாற்றுகள்/ கிழங்குகள்/ கரணைகளை 20-30 நிமிடம் ஊறவைத்து, பின்பு நிழலில் உலர்த்தி நடவு செய்ய வேண்டும்.

**இலை வழி தெளிப்பு**

2–4 மி.லி. நானோ டி.ஏ.பி.யை ஒரு லிட்டர் நீரில் கலந்து பயிரின் முக்கிய வளர்ச்சி பருவங்களான (கிளைப்பு, துளிர் விடும்) தருவாயில் தெளிக்க வேண்டும்.

அதிகமாக மணிச் சத்து தேவைப்படும் பயிர்கள் மற்றும் நீண்ட கால பயிர்களுக்கு நானோ டி.ஏ.பி.யை இரண்டாம் தெளிப்பாக பூக்கும் பருவத்திற்கு முன் தெளிக்கவும்.



**Rithvik Pipe**

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW
isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID
BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வெற்றி நிச்சயம் திட்டத்தின் கீழ் பசுமைக்குடில் கட்டுமானம் மற்றும் பயிர் சாகுபடி பயிற்சி



கோயம்புத்தூர், டிச.3

பசுமைக்குடில் கட்டுமானம் மற்றும் பயிர் சாகுபடி பயிற்சி குறித்த சிறப்பு திறன் பயிற்சித் திட்டத்தை வெற்றி நிச்சயம் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு பொறியியல் துறை, வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் ஆகியவை இணைந்து 30.10.25 முதல் 28.11.25 வரை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

மாறிவரும் காலநிலை நிலைமைகள், சுருங்கும் நில வளங்கள் மற்றும் உயர்தர தயாரிப்புகளுக்கான வளர்ந்து வரும் தேவை காரணமாக இன்றைய விவசாய சூழ்நிலையில் பசுமைக்குடில் சாகுபடி அதிகரித்து வருகிறது. பசுமை இல்ல அமைப்பு, கால நிலை கட்டுப்பாடு, கட்டுமானப் பொருட்களின் தேர்வு, நீர்ப்பாசன அமைப்புகள், பயிர் மேலாண்மை, பூச்சி மற்றும் நோய் கட்டுப் பாடு, ஆண்டு முழுவதும் உற்பத்தி, திறமையான வளங்களின் பயன்பாடு, தரம் மற்றும் ஏற்றுமதி திறன், நிலைத்தன்மை மற்றும் உணவுப் பாதுகாப்பு மற்றும் சந்தைப்படுத்தல் உத்திகள் குறித்து நிபுணர்கள் வழிகாட்டுதலை வழங்கினர்.

முதன்மையர் முனைவர் அ.ரவிராஜ் மற்றும் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு பொறியியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர், முனைவர் பாலாஜி கண்ணன், ஆகியோர் இந்த பயிற்சியை வழி நடத்தினர். இந்தப் பயிற்சியை துறை உதவிப் பேராசிரியர் முனைவர் க.அருணாதேவி ஒருங்கிணைத்தார்.

இப்பயிற்சியை மாவட்ட பயிற்சி அலுவலர் லலிதா, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு மையம் தொடர்ந்து கண்காணித்தார். பங்கேற்பாளர்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் பயிற்சிச் சான்றிதழ் வழங்கப்பட்டது. நவீன விவசாயத்தில் புதிய நிறுவனங்களை ஆதரிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட அரசாங்க மானியம் மற்றும் நிதி உதவித் திட்டங்களைப் பெறுவதற்கு பங்கேற்பாளர்களுக்கு இது கணிசமாக உதவியது. இந்த ஒரு மாத கால, தீவிரமான, திறன் அடிப்படையிலான பயிற்சி, பாதுகாக்கப்பட்ட சாகுபடி துறையில் தொழில்முனைவோர் மற்றும் வேலை வாய்ப்புகள் குறித்த வழிகாட்டுதலையும் இப்பயிற்சி வழங்கி வருகிறது.



# அரசு விதை உரிமம் பெற்ற விற்பனையாளரிடம் பட்டாணி விதைகளை வாங்கி பயன்பெற விதை ஆய்வு துணை இயக்குநர் அறிவுறுத்தல்

திண்டுக்கல், டிச.3

திண்டுக்கல் மாவட்டத்தில் பட்டாணி பயிரிடும் விவசாயிகள் தேவையான விதைகளை அரசு விதை உரிமம் பெற்ற விதை விற்பனையாளரிடம் வாங்கி அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இது குறித்து கரூர், விதை ஆய்வு துணை இயக்குநர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது, திண்டுக்கல் மாவட்டத்தில், கொடைக்கானல் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் விவசாயிகள் பட்டாணி பயிரிடுகின்றனர். அவ்வாறு பட்டாணி விதைகளை வாங்கும்பொழுது அதற்கான விற்பனை பட்டியலை வாங்கிட அறிவுறுத்தப்படுகிறது. அவ்வாறு வழங்கப்படும் விற்பனை பட்டியலில் விதையின் பெயர், ரகம், குவியல் எண், காலாவதி நாள் உள்ளிட்ட அனைத்தும் குறிப்பிட்டுள்ளதை சரிபார்த்து வாங்க வேண்டும், மேலும் விற்பனை உரிமம் பெறாத தனி நபரிடமோ, வியாபாரிகளிடமோ விதைகளை வாங்கக் கூடாது என அறிவுறுத்தப்படுகிறார்கள்.

விதை விற்பனையாளர்கள் விதைகளை விற்பனை செய்யும் போது விதைகள் சட்டத்தில் உள்ள காரணிகள் விவர அட்டையில் உள்ளதா என்பதை சரிபார்த்த பின்னரே விற்க வேண்டும். உண்மை நிலை விதைகளை விற்பனை செய்யும் போது தமிழ்நாடு விதை சான்று மற்றும் அங்கக சான்று துறையில் வழங்கப்பட்ட பதிவு சான்றிதழ் உள்ளதா என்பதை உறுதி செய்திடல் வேண்டும். விதை உரிமம் இல்லாமல் விதை விற்பனை செய்பவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என கரூர், விதை ஆய்வு துணை இயக்குநர் எச்சரித்துள்ளார்.

மேற்கண்ட விவரங்கள் இல்லாத விதைகளையும் மற்றும் அரசு உரிமமற்ற விதை விற்பனையாளர்களிடமிருந்து பெறப் படும் விதைகளை விவசாயிகள் பயன்படுத்தும் பட்சத்தில் முளைப்புத்திறன் குறைவதோடு பூச்சி நோய் தாக்குதல் அதிகமாகி மிக குறைவான விளைச்சலால் கடுமையான மகசூல் இழப்பு ஏற்பட வழிவகுக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதனைத் தவிர்க்க, விவசாயிகள் சான்று பெற்ற விதைகளை அரசு அங்கீகாரம் பெற்ற விதை விற்பனை நிலையங்களி லிருந்து வாங்கி பயன்படுத்த வேண்டாம் எனவும் தெரிவித்து உள்ளார்.

அரசு உரிமம் பெற்ற விதை விற்பனையாளர்கள் தங்கள் விற்பனை நிலையங்களில் விதை இருப்பு பலகையையும், விதை இருப்பு பதிவேட்டையையும், விதை விற்பனை விலைப் பட்டியல்களையும், விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்று துறையால் வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழ் மற்றும் விதை முளைப்புத் திறன் அறிக்கையினையும் முறையாக பராமரிக்க வேண்டும்.

அவ்வாறு மேற்குறிப்பிட்ட ஆவணங்களை முறையாக பராமரிக்காத விதை விற்பனையாளர்கள் மீது விதைச்சட்டம் 1966, விதை விதிகள் 1968, விதைக் கட்டுப்பாட்டு ஆணை 1983 ஆகியவைகளின் படி கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இறுதியாக அவர் மேலும் தெரிவித்ததாவத, அரசு உரிமம் பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக விதைகளை விற்பனை செய்வோர் மீது அத்தியாவசியப் பொருள்கள் சட்டம் 1955ன்படி கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.



# கால்நடைகளின் சில நோய்களுக்கான பாரம்பரிய மூலிகை முறை தீர்வுகள்

விவசாயிகளுக்கு என்றும் உற்ற நண்பனாக விளங்குபவை கால்நடைகளுள் ஒன்றான மாடுகள். கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் விவசாயிகள் அவற்றை தாக்கும் எண்ணற்ற நோய் களை கடந்து வருகின்றனர். அவற்றால் பலத்த பொருளாதார இழப்பும் ஏற்படுகிறது.

கால்நடைகளைத் தாக்கும் முக்கிய நோய்களுக்கு விவசாயிகளே செய்யக்கூடிய எளிமையான பாரம்பரிய முறையிலான தீர்வுகளை இப்பகுதியில் அறியலாம்.

**உண்ணிகள் மூலம் காய்ச்சல்**

பெபிசியோசிஸ் எனப்படும் உண்ணிக் காய்ச்சல் ஆனது பெபிசியா எனும் ஒரு செல் இரத்த ஒட்டுண்ணிகளால் உண்ணிகள் மூலம் கால்நடைகளுக்கு பரவக்கூடியது. பாதிக்கப்பட்ட மாடுகளில் அதிக காய்ச்சல், இரத்தம் கலந்து காபி நிறத்தில் சிறுநீர் காணப்படும். உண்ணிகளும் மாடுகளின் மேல் காணப்படும். அத்தகைய மாடுகளுக்கு சிறிதளவு வெல்லத்துடன் சேர்த்து அரைக்கப்பட்ட கீழாநெல்லி தழைகளை வாய்வழியாக ஒரு வாரத்திற்கு கொடுத்தால் இந்நோய் குணமாகும்.

**மடி நோய் / மித மடி நோய்**

மடி நோய் கறவை மாடுகளை அதிகம் தாக்கி நேரடியாக பொருளாதார இழப்பை ஏற்படுத்துகிறது. நோய் வந்த மாடுகளில் மடி வீக்கமும், பாலின் தன்மையும் மாறுபடும். மடியின் எந்த காம்பிலும் இந்த பாதிப்பு வரலாம். நுண்கிருமிகள் காரணமாகவே பெரிதும் பாதிப்பு ஏற்படுகிறது. கால்நடை பராமரிப்பில் ஏற்படும் சுகாதாரக் குறைபாட்டினால் இந்த பாதிப்பு உண்டாகிறது. மடி நோய் தாக்கிய கறவை மாடுகளுக்கு சோற்றுக் கற்றாழை, மஞ்சள் தூள், வேப்பிலை, சிறிதளவு சுண்ணாம்பு மற்றும் எலுமிச்சை சாறு ஆகியவற்றை சிவப்பு நிறமாக நன்றாக அரைத்து, பால் கறந்த பின்பு மடியின் மீது காலை மற்றும் மாலை வேளைகளில் ஒரு வாரத்திற்கு பூசினால் மடி நோய் முற்றிலும் குணமடையும்.

### ஈப்புழுவால் பெரிதாகும் புண்கள்

கால்நடைகளில் ஏற்படும் காயங்களை கவனிக்காவிட்டால் அவற்றில் தொற்று ஏற்பட்டு, ஈக்கள் மொய்த்து சீழ் பிடித்து, புழு வளரும் புண்களாக மாறுகின்றன. ஈக்கள், வண்ண ஈக்கள் போன்ற பூச்சிகளின் முட்டையில் இருந்து வரும் புழுக்களே இந்த புண்கள் ஆறாமல் இருப்பதற்கு காரணம்.

இந்த புண்களில் நுண்கிருமிகள் வளரவும் வாய்ப்பு அதிகம் உள்ளது. அத்தகைய காயங்களில் சிறிதளவு வேப்ப எண்ணெய் தடவி அதனுடன் கற்பூர தூளை பூசினால் புழுக்கள் அனைத்தும் வெளியேறுவதுடன், காயங்கள் சீக்கிரம் ஆறும்.

### சினைப்பருவ பிரச்சனைகள்

சில கிடேரிக் கன்றுகளில் ஒன்றரை வயதைக் கடந்த பின்பும் சினைப் பருவத்தை அடையாமல் இருக்கும். கருப்பை வளர்ச்சி குறைவு மற்றும் குறைந்தளவு கருமுட்டை நுண் அறைகள் போன்ற காரணங்களால் இந்த பிரச்சனை ஏற்படும். அத்தகைய கிடேரிகளுக்கு காலை வேளையில், தண்ணீரில் நன்கு ஊற வைத்த கருப்பு கொண்டைக்கடலையை ஒரு கையளவு இருபது நாட்களுக்கும், பிறகு தண்ணீரில் ஊற வைத்த கொள்ளு

ஒரு கையளவு பத்து நாட்களுக்கும் வாய் வழியாக கொடுத்தால் நல்ல அறிகுறிகளுடன் மாடுகளில் சினைப் பருவம் வெளிப்படும். ஒரு சில மாடுகள் தவறாமல் சினை பருவத்திற்கு வந்தாலும், சினை ஊசி போட்டும் சினை நிற்பதில்லை. அத்தகைய மாடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்துவிட்டு, சினைப் பருவத்தின் போது காலை வேளையில் நன்கு அரைக்கப்பட்ட கருவேப்பிலையை சிறிதளவு வாய்வழியாக கொடுத்த பின்பு சினை ஊசி செலுத்தினால் சினை பிடிக்கும் வாய்ப்பு அதிகம் உள்ளது.

### மாடுகளில் கருப்பை பிரச்சனைகள்

சில மாடுகளில் கன்று ஈன்ற பின்னரோ அல்லது கன்று வீச்சினாலோ, நுண்கிருமிகளால் கருப்பை அறையில் சீழ் பிடித்து துர்நாற்றத்துடன் நச்சு வெளியேறும். அத்தகைய மாடுகளுக்கு காலை வேளையில் சிறிதளவு அகத்திக்கீரையுடன் ஒரு வெள்ளை முள்ளங்கியை ஐந்து நாட்களுக்கு வாய்வழியாக கொடுத்தால் கருப்பை சீராகும்.

மேலும் விவரங்களுக்கு, **முனைவர் அ.லட்சுமிகாந்தன், மருத்துவர் ம.க.விஜயசாரதி, உதவிப் பேராசிரியர்கள், கால்நடை ஒட்டுண்ணியியல் துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒரத்தநாடு.**

Rithvik Pipe

IS 4985 : 2021 IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# தூக்கநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் உழவர் நல சேவை மையங்கள் அமைக்க அழைப்பு

ஈரோடு, டிச.3

2025-26 ஆண்டு வேளாண் நிதி நிலை அறிக்கையில் முதலமைச்சரின் உழவர் நல சேவை மையம் என்னும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.



அதன்படி வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் வேளாண் பொறியியல் துறையில் பட்டப்படிப்பு மற்றும் பட்டயபடிப்பு முடித்த இளைஞர்களின் பட்டறிவும், தொழில்நுட்பத் திறனும், உழவர்களுக்கு உதவியாக இருக்கும் வகையில் ஈரோடு மாவட்டம், தூக்கநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் 2 உழவர் நல சேவை மையங்கள் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இம்மையங்களில் உழவர் களுக்குத் தேவையான விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள் மற்றும் வேளாண் உற்பத்தியை பெருக்க பயிர்களில் ஏற்படும் பூச்சி நோய் மேலாண்மைக்குத் தேவையான ஆலோசனைகள் வழங்குவதோடு, நவீன தொழில்நுட்பங்கள், வேளாண் விளை பொருட்களை மதிப்பு கூட்டுதல் குறித்த ஆலோசனைகளும் வழங்கப்படும்.

தூக்கநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் வேளாண்மை பொறியியல் பயின்ற இளைஞர்களின் திறன் உழவர்களுக்கு உதவியாக இருந்து உற்பத்தியை அதிகப்படுத்தும் நோக்கத்தில் 10 லட்சம், 20 லட்சம் மதிப்பீட்டில் 2 மையங்கள் அமைக்க இலக்கு பெறப்பட்டுள்ளது. மேற்படி மையங்களுக்கு 30 சதவீத மானியமாக ரூ.3 லட்சம் வரை தொகை வழங்கப்படும். வேளாண்மை உழவர் நலத்துறையில் வழங்கப்படும் அனைத்து உரிமங்களும் முதலமைச்சரின் உழவர் நல சேவை மைய பயனாளிகளுக்கும் வழங்கப்படும்.

இத்திட்டத்தில் பயனடைய விரும்பும் 20 முதல் 45 வயதுக்கு உட்பட்ட வேளாண் பட்டப்படிப்பு மற்றும் பட்டயபடிப்பு முடித்த ஆதிதிராவிட பெண்கள், ஆண்கள் மற்றும் பொது இனத்தின் கீழ் உள்ள பெண்கள் வங்கிகளில் தங்களுடைய விரிவான திட்ட அறிக்கையுடன் கடன் பெற விண்ணப்பிக்கலாம். வங்கி நடைமுறைகளைப் பின்பற்றி கடன் ஒப்புதல் பெற்ற பின்பு மானிய உதவி பெற https://www.tnagrisnet.tn.gov.in/Kavi-aDP.scheme_register என்ற வலைத்தளத்தில் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

முதல்வரின் உழவர் நல சேவை மையங்கள் மாநில அரசு உதவியுடன் தொடங்கப்படுவதால் இந்த அரிய வாய்ப்பினை, தூக்கநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் உள்ள வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் வேளாண் பொறியியல் படித்த பட்டதாரிகள் / பட்டயதாரர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இது தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு தங்கள் பகுதி வட்டார வேளாண்மைவிரிவாக்க மையங்களை தொடர்பு கொண்டு பயன்பெற கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு தூக்க நாயக்கன்பாளையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், தெரிவித்தார்.

## தலைக் கவசம் உயிர்க் கவசம்



# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயிர் மேம்படுத்தலுக்கான மூலக்கூறு இனப்பெருக்கம் – செய்முறைப் பயிற்சி

கோயம்புத்தூர், டிச.3

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், பயிர் மேம்படுத்தலுக்கான மூலக்கூறு இனப்பெருக்கம் என்ற இரண்டு நாள் செய்முறைப் பயிற்சியை தற்போது தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் வளாகத்திலுள்ள உயிரி தொழில்நுட்பத் துறை, தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மையத்தில் (CPMB&B) நடைபெற்று வருகிறது. இந்தப் பயிற்சி 3.12.25 மற்றும் 4.12.25 ஆம் தேதிகளில் நடைபெறுகிறது.



தமிழ்நாடு, கேரளா மற்றும் தில்லி மாநிலங்களைச் சேர்ந்த 26 பயிற்சி பெறுபவர்கள், SRM பல்கலைக்கழகம், கருண்யா பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், காலிகட் பல்கலைக்கழகம், தில்லி பல்கலைக்கழகம் மற்றும் TNAU ஆகியவற்றின் முதுநிலை மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் எனப் பல்வேறு நிறுவனங்களிலிருந்து கலந்து கொள்கிறார்கள்.

பயிற்சி நிகழ்ச்சியை CPMB&B இயக்குநர் முனைவர் என்.செந்தில், துவக்கி வைத்தார். உயிரி தொழில்நுட்பத் துறைத் தலைவர் முனைவர் ஈ.கோகிலதேவி, வரவேற்புரையை வழங்கினார். சிறப்பு உரையை முனைவர் கே.வெங்கடேசன், முதன்மையர் (தோட்டக்கலை), வழங்கினார். இந்தப் பயிற்சி, மூலக்கூறு குறியீடுகள் (Molecular Markers) மற்றும் அவை பயிர் இனப்பெருக்கத்தில் பயன்படும் முறைகள் குறித்த அடிப்படை அறிவினை வழங்குவதோடு, நிபுணர் பேராசிரியர்கள் நடத்தும் விரிவுரைகள் மற்றும் செய்முறை அமர்வுகள் மூலம் பயிற்சி பெறுபவர்களுக்கு முழுமையான கற்றலை வழங்குகிறது.

பங்கேற்பாளர்கள் PCR தொழில்நுட்பம் மற்றும் குறியீடு உதவியுடன் செய்யும் இனப்பெருக்கம் (MAS) ஆகியவற்றில் நேரடி அனுபவம் பெறுகின்றனர். இந்த இரண்டு நாள் பயிற்சி, பயிற்சி பெறுபவர்களின் மரபணு-அடிப்படையிலான பயிர் இனப்பெருக்க திறன்களை வலுப்படுத்தி, பயிர் மேம்பாட்டில் ஜெனோமிக்ஸ் கருவிகளைப் பயன்படுத்தும் திறனை மேம்படுத்துகிறது.

இந்தப் பயிற்சி நிகழ்ச்சி மரபணு தொழில்நுட்பத் துறையின் இணைப் பேராசிரியர் முனைவர் எஸ்.கீதாஞ்சலியால் ஒருங் கிணைக்கப்படுகிறது.

